**நவம்பர் – 27**

# TNPSC துளிகள்

- ❖ பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங், 5வது உலகப் பேரிடர் மேலாண்மை மாநாட்டினை காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.
- ❖ இந்திய அரசும் ஆசிய மேம்பாட்டு வங்கியும் 300 மில்லியன் டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
    - ○ 13 மாநிலங்களிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் விரிவான ஆரம்பச் சுகாதார மருத்துவச் சேவைகளை அணுகும் வசதிகளை வலுப்படுத்தவும், அதனை மேம்படுத்தச் செய்யவும் இந்தக் கடன் ஒப்பந்தம் உதவும்.
- ❖ மத்தியப் புலனாய்வு அமைப்பின் சிறப்பு இயக்குநர் பிரவீன் சின்ஹா சர்வதேசக் குற்றவியல் காவல் அமைப்பின் (INTERPOL) நிர்வாகக் குழுவிற்கான ஒரு ஆசியப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
    - ○ ஐக்கிய அரபு அமீரகத்தினைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் அகமது நாசர் அல்-ரைசி உலகக் காவல் அமைப்பின் தலைவராக 4 ஆண்டுகள் அளவிலான ஒரு பதவிக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

# தமிழ்நாடு செய்திகள்

## வேதா நிலையம்



- ❖ மறைந்த தமிழக முதல்வர் J. ஜெயலலிதா அவர்களின் இல்லத்தினை நினைவிடமாக மாற்ற வேண்டும் என்று அறிவித்த முந்தைய அ.தி.மு.க அரசின் உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது.
- ❖ இந்த இல்லம் ‘வேதா நிலையம்’ என்று அழைக்கப்படுகிறது.
- ❖ இந்த இல்லமானது சென்னையிலுள்ள போயஸ் கார்டன் பகுதியில் அமைந்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## பிரதான் மந்திரி கரிப் கல்யான் அன்ன யோஜனா




- மத்திய அரசானது பிரதான் மந்திரி கரிப் கல்யான் அன்ன யோஜனா என்ற திட்டத்தை நான்கு மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.
- இத்திட்டத்தின் 5 ஆம் கட்டத்தின் ஒரு பகுதியாக 2021 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 2022 ஆம் ஆண்டு மார்ச் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது
- இத்திட்டமானது கோவிட்-19 பெருந்தொற்றிற்குப் பிறகு 2020 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
- இத்திட்டத்தின்கீழ், ஒரு நபருக்கு ஒவ்வொரு மாதமும் 5 கிலோ உணவு தானியங்கள் இலவசமாக வழங்கப் படுகிறன.
- நேரடிப் பயன் பரிமாற்றம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (அந்தியோதயா அன்ன யோஜனா மற்றும் முன்னுரிமையுள்ளக் குடும்பங்கள்) ஆகியவற்றின் கீழ் பயன் பெறுபவர்களுக்கும் இது பயனளிக்கிறது.

## O-SMART திட்டம்

- “பெருங்கடல் பணிகள், மாதிரிகளைச் சேகரித்தல், பயன்பாடு, வளங்கள் மற்றும் தொழில்நுட்பம்” (O-SMART: Ocean Services, Modelling, Application, Resources and Technology) என்ற திட்டமானது 2021 – 26 ஆகிய காலக் கட்டத்திற்கு நீட்டிக்கப் பட்டுள்ளது.
- பிரதமர் மோடி தலைமையிலான மத்தியப் பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழு இதற்கு ஒப்பதல் அளித்தது.
- O-SMART திட்டம் 7 துணைத் திட்டங்களை உள்ளடக்கியது.
- அனைத்துத் துணைத் திட்டங்களும் புவி அறிவியல் அமைச்சகத்தின் தன்னாட்சி

நிறுவனங்களால் செயல்படுத்தப் படுகின்றன.




## தேசியத் தொழிற்பயிற்சித் திட்டம்

- பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் குழுவானது தேசியத் தொழிற்பயிற்சித் திட்டத்தினை அடுத்த 5 ஆண்டுகளுக்குத் தொடர்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- 2021-22 முதல் 2025-26 வரையில் இத்திட்டத்தைத் தொடர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- இதன்கீழ், தொழில்துறை மற்றும் வணிக அமைப்புகள் தோராயமாக 9 லட்சம் பயிலர்களுக்குப் பயிற்சி வழங்கும்.

## தோஸ்தி பயிற்சி

- இந்தியா, மாலத்தீவுகள் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் 'தோஸ்தி' எனப்படும் 15வது முத்தரப்பு கடலோரக் காவற்படைப் பயிற்சியை மாலத்தீவில் மேற்கொள்கின்றன.
- 2021 ஆம் ஆண்டானது தோஸ்தி என்ற முத்தரப்பு கடலோரக் காவற்படைப் பயிற்சியின் 30வது ஆண்டு நிறைவாகும்.
- இந்தியக் கடலோரக் காவற்படைக் கப்பல்களான ஐ.சி.ஜி.எஸ். அபூர்வா மற்றும்

ஐ.சி.ஜி.எஸ். வஜ்ரா ஆகியவை எஸ்.எல்.சி.ஜி.எஸ். சுரக்சா எனும் இலங்கை கடற்படைக் கப்பலுடன் இணைந்து இப்பயிற்சியில் ஈடுபட்டன.

## மைசூர் பிரகடனம்

- 16 மாநிலங்களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் மைசூர் பிரகடனத்தில் கையெழுத்து போட்டுள்ளனர்.
- இதன் கீழ் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் நாட்டில் உள்ள பஞ்சாயத்துகளின் மூலமான பொதுவான குறைந்தபட்சச் சேவை வழங்கீடானது செயல்படுத்தப்பட உள்ளது.
- இந்தப் பிரகடனமானது குடிமக்களை மையமாக கொண்ட சேவைகளை ஆளுமையின் இதயமாக (மையமாக) அங்கீகரிப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரகடனமானது பஞ்சாயத்து அமைப்புகளால் நேரடியாக வழங்கப்படும் சேவைகள் மற்றும் ஒரு கண்காணிப்புச் செயல்முறையின் மூலம் பஞ்சாயத்து அமைப்புகளால் வழங்கப்படும் பிற துறை சார்ந்த சேவைகள் ஆகியவை பற்றி கூறுகிறது.

## தேசியக் குடும்ப மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்பு

**Hunger watch**

The nutritional status of children in India barely improved in 2019-20 from the levels in 2015-16, the National Family Health Survey-5 data show

(IN %)



| Indicator | 2019-20 | 2015-16 | 2005-06 |
|---|---|---|---|
| Children aged six to 59 months who are anaemic | 67.1 | 58.6 | 69.4 |
| Children under five who are stunted | 35.5 | 38.4 | 48 |
| Children under five who are wasted | 19.3 | 21 | 19.8 |
| Children under five who are severely wasted | 7.7 | 7.5 | 6.4 |
| Children under five who are underweight | 32.1 | 35.8 | 42.5 |
| Children aged six to 23 months receiving an adequate diet | 11.3 | 9.6 | - |
| Institutional births | 88.6 | 78.9 | 38.7 |

- 5வது தேசியக் குடும்பம் மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்பானது வெளியிடப் பட்டு உள்ளது.
- இது நாட்டின் சமூகப் பொருளாதாரம் மற்றும் சுகாதாரக் குறிகாட்டிகள் மீதான மிக விரிவான ஒரு கணக்கெடுப்பாகும்.
- முந்தையக் கணக்கெடுப்புகள் 1992-93, 1998-99, 2005-06 மற்றும் 2015-16 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப் பட்டன.
- இந்தக் கணக்கெடுப்புகள் அனைத்தும் மும்பையில் உள்ள மக்கள்தொகை அறிவியலுக்கான சர்வதேசக் கல்வி நிறுவனத்துடன் இணைந்து சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தால் மேற்கொள்ளப் படுகின்றன

*முக்கிய தகவல்கள்*

- 2019-2021 ஆகிய ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் 1000 ஆண்களுக்கு 1020 பெண்கள் இருந்தனர்.
- 1881 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதலாவது நவீன ஒத்திசைவு மக்கள்தொகை

கணக்கெடுப்பிற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு தேசியக் குடும்பம் மற்றும் சுகாதாரக் கணக்கெடுப்புகளிலும் இதுவே மிக அதிகப் பாலின விகிதமாகும்.

- மக்கள்தொகையானது ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு அதனை மாற்றிக் கொள்ளும் ஒரு நிலைக்கு வரும் என்று எதிர்பார்க்கும் ஒரு வரம்பிற்கும் கீழாக மொத்தக் கருவுறுதல் வீதம் சரிந்துள்ளது.
- 2019-2021 ஆம் ஆண்டில் 2 ஆக இருந்த மொத்தக் கருவுறுதல் வீதமானது 2.1 என்ற அளவிலான மாற்றுக் கருவுறுதல் வீதத்தை விடச் சற்று குறைவாக இருந்தது.
- குழந்தைகளின் ஊட்டச்சத்து அளவானது மேம்பட்டுள்ள அதே சமயத்தில் அது மெதுவான வேகத்திலேயே மேம்பட்டுள்ளது.
- இந்தியா உணவுப் பாதுகாப்பு நிலையினை அடைந்திருந்தாலும், 60% இந்தியர்கள் ஊட்டச் சத்து மிக்க உணவுகளை வாங்க இயலாத நிலையிலேயே உள்ளனர்.

# சர்வதேசச் செய்திகள்

## 13வது ASEM உச்சி மாநாடு




- 13வது ஆசிய–ஐரோப்பா சந்திப்பின் உச்சி மாநாடானது சமீபத்தில் நடத்தப் பட்டது.
- இதில் இந்தியத் தரப்பானது துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்ய நாயுடுவால் பிரதிநிதித்துவப் படுத்தப் பட்டது.
- இந்த அமைப்பிற்குத் தற்போதைய தலைமை என்ற வகையில் கம்போடியா இதனை நடத்தியது.
- 2021 ஆம் ஆண்டில் இந்த அமைப்பின் ஒரு புதிய உறுப்பினர் துருக்கி ஆகும்
- இந்த உச்சி மாநாட்டிற்கு "பகிரப்பட்ட வகையிலான வளர்ச்சிக்குப் பன்முகத் தன்மை வாதத்தை வலுப்படுத்துதல்" (Strengthening Multilateralism for Shared Growth) எனத் தலைப்பிடப் பட்டுள்ளது.
- இந்தச் சந்திப்பானது 51 உறுப்பினர் நாடுகளின் பங்கேற்புடன் காணொலி வாயிலாக நடத்தப் பட்டது.
- உறுப்பினர் நாடுகள் தவிர, ASEAN மற்றும் ஐரோப்பிய ஒன்றிய அமைப்பு நாடுகளும் இதில் பங்கேற்றன.

# பொருளாதாரச் செய்திகள்

## சரிநிகர் வரி விதிப்பிலிருந்து மாற்றம் 2020

- இணைய வர்த்தக வழங்கீடுகள் மீது இந்தியா விதித்த 2% சரிநிகர் வரி விதிப்பிலிருந்து (2020) மாறுவதற்கும் 2 ஆம் நிலை தீர்வின் கீழான சரிநிகர் வரி விதிப்பு தொடர்பான அமெரிக்காவின் வர்த்தக நடவடிக்கைகள் மீதும் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் தொடங்கப்பட உள்ள இந்த மாற்று அணுகுமுறை டிஜிட்டல் பொருளாதாரத்தின் வரிச் சவால்களுக்கான 2 நிலை தீர்வுகளின் கீழ் மேற் கொள்ளப் பட்டது.

## JP மோர்கன் – உலகின் மிக ஒழுங்கான (முறையான) வங்கி

- முறையான பரந்த நிதி மேலாண்மை அமைப்பிற்காக வேண்டி உலகின் மிக ஒழுங்கான வங்கியாக J.P. மோர்கன் சேஸ் வங்கி மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- உலக ஒழுங்குமுறை அமைப்புகளால் வெளியிடப்பட்ட சமீபத்திய வருடாந்திர முன்னணி கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் தரவரிசையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.
- G20 நாடுகளின் ஒழுங்குமுறை அமைப்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட நிதி நிலைத்தன்மை வாரியமானது உலகின் 30 மிக ஒழுங்கான வங்கிகளின் சமீபத்தியப் பட்டியலை வெளியிட்டது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பிரான் நெபுலா

- ஹபிள் தொலைநோக்கியானது “பிரான் நெபுலா” (Prawn Nebula) என்ற விண்மீன் திரளைக் கண்டறிந்துள்ளது.
- இது ஸ்கார்பியஸ் விண்மீன் திரளில் சுமார் 6000 ஒளி ஆண்டுகள் தொலைவிற்கு அப்பால் அமைந்துள்ள ஒரு மிகப்பெரிய நட்சத்திரக் குவியலாகும்.
- வானியலாளர்கள் இந்தப் பிரான் நெபுலாவினை உமிழ்வு நெபுலா என வகைப்படுத்தச் செய்கின்றனர்.
- அதாவது இதன் வாயுவானது அருகமைந்த நட்சத்திரங்களின் கதிர் வீச்சினால்

ஆற்றலூட்டப்பட்டு (அ) அயனியூட்டப்பட்டு அமைந்துள்ளது.




**DART திட்டம்**

- அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா, DART எனப்படும் இது போன்ற முதல் வகை திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது ஒரு குறுங்கோளின் மீது ஒரு விண்கலத்தை வேண்டுமென்றே மோதச் செய்வதன் மூலம் அதன் பாதையை மாற்றுவதற்கான ஒரு திட்டமாகும்.
- DART என்பதன் விரிவாக்கம் Double Asteroid Redirection Test (இரட்டைக் குறுங்கோள் மாற்றுப் பாதைப் பரிசோதனை) ஆகும்.
- DART விண்கலமானது அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள வான்டன்பெர்க் என்ற விண்வெளி தளத்திலிருந்து ஸ்பேஸ் X பால்கன் 9 ராக்கெட் மூலம் விண்ணில் ஏவப் படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

**பார்தே கூயெல்ஃபா நைட்ஹூட் (வீரத்திருமகன்) பட்டம்**

- கேரளாவைச் சேர்ந்த டாக்டர் S.K. சோஹன் ராய் என்பவர் பார்தே கூயெல்ஃபாவின் நைட் ஹூட் எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட முதல் இந்தியர் ஆவார்.
- இவர் ஏரிஸ் நிறுவனக் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும் நிறுவனரும் ஆவார்.
- வணிகம் மற்றும் திரைப்படத் துறையில் இவர் ஆற்றிய மனிதநேயமிக்க மற்றும்


சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளுக்காக வேண்டி இவருக்கு இந்தப் பட்டம் வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளது.



## முக்கிய தினங்கள்

### பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் – நவம்பர் 25

- உலகெங்கிலும் உள்ள பெண்கள் எவ்வாறு பல்வேறு விதமான வன்முறைகளுக்கு ஆளாகிறார்கள் என்பது பற்றியும் பெரும்பாலும் மறைக்கப்படும் இந்தப் பிரச்சினையின் உண்மைத் தன்மை பற்றியும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதற்காக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Orange the World: End Violence against Women Now!"." என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★